


# 3 வணிக அமைப்புக்கள்

## அறிமுகம்




மனித வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வேண்டியது அவசியம். முற்காலத்தில் மனிதன் தமக்குத் தேவையானவற்றைத் தாமே உற்பத்தி செய்து கொண்டான். தற்காலத்தில் தம் தேவை களைப் பூர்த்தி செய்வதற்கு பொருட்களையும், சேவைகளையும் சந்தையிலிருந்தே பெற்றுக் கொள்கிறான். இதனால் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்காகப் பல்வேறு வகையான வணிக அமைப்புக்கள் தோன்றலாயின.

தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காக பொருட்களையும், சேவைகளையும் வழங்கும் பொருட்டு ஒரு மனிதன் அல்லது மனிதர்கள் ஒன்றிணைவது வணிக அமைப்பு எனப்படும்.

மனித தேவைகள் படிப்படியாக விருத்தியடைந்ததால் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியும் விரிவுபட்டது. வணிக நிறுவனங்களுக்குப் பல்வேறு நபர்களால் மூலதனம் இடப்படும். மூலதனம் இடுபவர்களே வணிகத்தின் உரிமையாளர்கள் ஆவர். உரிமை அடிப்படையில் தனியார்துறை, அரச துறை என வணிக அமைப்புக்களை வகைப்படுத்தலாம். இவ் வகைப்படுத்தலின் படி தனியார் துறையிலும், அரச துறையிலும் பல வணிக அமைப்புக்கள் காணப்படுகின்றன.

## உரிமை அடிப்படையில் வணிக அமைப்புகளை வகைப்படுத்தல்

வணிக நிறுவனங்களுக்கு மூலதனத்தை இடுவதன் மூலம் நேரடியாகச் சம்பந்தப்படுபவர்கள் அவற்றின் உரிமையாளர் ஆவர். இவ் உரிமையாளர்கள் வணிக நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்வதன் மூலம் இலாப நட்டத்தைப் பெற்றுக்கொள்வர். உரிமை அடிப்படையில் வணிக நிறுவனங்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.




**அட்டவணை இல : 1**

## தனியார் துறை வணிக அமைப்புக்கள்

ஒரு தனிநபரோ அல்லது தனிநபர்கள் பலரோ மூலதனமிட்டு நடத்தும் வணிகங்கள், தனியார் துறை வணிக அமைப்புக்கள் எனப்படும். தனியார் துறையின் பிரதான நோக்கம் இலாபம் ஈட்டுவதாகும்.

**உதாரணம் :-** தனியுரிமை வணிக அமைப்புக்கள்.

எனினும் இலாபம் ஈட்டும் நோக்கத்திற்குப் புறம்பாக, சமூகநல நோக்கங்களுக்காகச் செயற்படும் அமைப்புக்களையும் காணலாம்.

**உதாரணம் :-** கூட்டுறவு அமைப்புக்கள்.

தனியார் துறை வணிகங்கள், ஒரு தனிநபருக்குச் சொந்தமான சிறிய அளவு வணிகங்கள் தொடக்கம், அதிகமான உரிமையாளர்களைக் கொண்ட பெரிய அளவிலான கம்பனிகள் வரை பரவலாகக் காணப்படுகின்றன. இதனால் தனியார் துறையைச் சார்ந்த அமைப்புக்களின் தன்மைகள் ஒன்றுக்கொன்று வேறு பட்டனவாகும். இவற்றுக்கான விரிவான விளக்கம் பின்வருமாறு,

## தனியுரிமை வணிகங்கள்

தனியொருவருக்கு உரிமையுடைய வணிகங்கள் தனியுரிமை வணிகங்கள் எனப்படும்.



படஇல. : 1

இவை உலகின் பல பாகங்களிலும் பரவலாகக் காணப்படும் வணிக அமைப்பு வகையாகும் இதற்கான முக்கிய காரணங்களாவன, இவற்றை ஆரம்பிப்பது இலகுவானதாக இருப்ப தோடு, இவற்றை ஆரம்பிப்பதற்கு சிறிய அளவு மூலதனம் போதுமான தாக இருப்பதும், குடும்ப உறுப்பினர் களுடன் சேர்ந்து நடத்தக் கூடியதாக இருப்பதும் ஆகும். சிறிய சில்லறைக் கடைகள், உணவகங்கள், சிகைய லங்கார நிலையங்கள் (சலூன்) போன்றன இவற்றுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

தனியுரிமை வணிகங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:-

* ஒரு தனிநபருக்கே உரிமை.
* உரிமையாளரினாலேயே மூலதனம் இடப்படும்.
* பதிவு செய்தல் கட்டாயமில்லை (எனினும் வணிகத்தைப் பதிவு செய்து கொண்ட பின் நடத்துவது சிறந்ததாகும்)
* தனியுரிமை வணிகங்களுக்குச் சட்ட ஆளுமை இல்லாததால் குறிப்பிட்ட தனியுரிமை வணிகம் சட்டத்தின் முன், வணிகத்தின் பெயரில் தனியாளாகத் தோற்ற முடியாது.
* நெடுவாழ்வுத் தன்மை அரிதாகவே காணப்படும்.
* பொறுப்பு வரையறுக்கப்படாததால், கடன்களைத் தீர்ப்பதற்காகத் தமது சொந்தச் சொத்துக்களையும் இழக்கவேண்டி ஏற்படலாம்.
* சகல முகாமைத்துவ செயற்பாடுகளையும் உரிமையாளரே செய்தல் வேண்டும். முகாமைத்துவ திறனுடையவர் வணிகத்தைச் சிறப்பாக கொண்டு நடத்தலாம்.
* வணிகச் செயற்பாடுகளால் பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் உரிமையாளருக்கே கிடைப்பதால் அவர் மிகக் கவனமாகவும் ஊக்கத்து டனும் செயற்படுவார். வணிகத்தின் வெற்றி அவரின் வெற்றியாகும்.
* கணக்குகளைப் பதிவதும், பேணுவதும் அவசியமில்லையாயினும் அவ்வாறு செய்வது சிறந்ததாகும்.



இலவச விநியோகத்திற்காக

## பங்குடைமை வணிகங்கள்

இலாபம் பெறும் நோக்கில் பொதுவில் வணிகமொன்றை நடத்திச் செல்லும் நபர்களிடையே காணப்படும் உடன்பாடு, பங்குடைமை எனப்படும்.

இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ இணைந்து வணிகங்களை நடத்திச் செல்வதைக் காணலாம். இவை பங்குடைமை எனப்படும். பங்குடைமை வணிகமொன்றை வாய் மொழி மூல அல்லது எழுத்துமூல ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கிக் கொள்ளலாம். எனினும் எழுத்திலான ஒப்பந்தத்தின் மூலம் பங்குடைமையை அமைப்பது மிகவும் சிறந்ததாகும். 1840ஆம் ஆண்டின் மோசடிகள் தவிர்ப்புச் கட்டளைச் சட்டத்தின் படி ரூபா 1000க்கு மேற்பட்ட மூலதனத்தைக் கொண்ட பங்குடமைகளில் எழுத்திலான ஒப்பந்தம் இருத்தல் வேண்டும்.

பங்குடைமை வணிகங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:-


* ஒரு பங்குடைமை வணிகத்தில் குறைந்தது இரு பங்காளர்களும், கூடியது இருபது பங்காளர்களும் இடம்பெறலாம். (2 - 20)
* பங்காளர்களே மூலதனம் இடுவர்.
* பதிவு செய்தல் கட்டாயமில்லையெனினும் பதிவு செய்வது மிகவும் சிறந்ததாகும். பங்காளரின் பெயரிலன்றி வேறு பெயர்களில் பங்குடமை நடத்தப்படுமாயின் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்
* பதிவு செய்யப்பட்டாலோ, அல்லது பதிவு செய்யப்படாவிட்டாலோ, பங்குடைமை வணிகங்கள் சட்டத்தின் முன்னிலையில் தனி ஆள் ஆகக் கருதப்படுவதில்லை.
* நீடித்த தன்மை காணப்படுவது அரிது.
* பொறுப்பு வரையறுக்கப்படாததாகும். புறக்கடன்களை தீர்ப்பதற்காக பங்காளரின் சொந்தச் சொத்துக்களையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.
* முகாமையில் சகல பங்காளரும் ஈடுபட முடிவதோடு பங்காளரின் தனிப்பட்ட திறன்களையும், அனுபவங்களையும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு உண்டு.
* பங்குடைமை உழைத்த இலாப நட்டம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பகிரப்படும். ஒப்பந்தமொன்று இல்லாதவிடத்து இலாப நட்டம் சமமாகப் பகிரப்படும்.
* கணக்குகளைப் பதிவதும் பேணுவதும் கட்டாயம் இல்லையெனினும் அவ்வாறு செய்வது சிறந்ததாகும்.


இலவச விநியோகத்திற்காக

## வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

2007 ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு உருவாக்கப்படும் சட்ட ஆளுமையுள்ள, பொறுப்பு வரையறுக்கப்பட்ட அமைப் புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் எனப்படும்.

கம்பனிச் சட்டத்தின்படி கம்பனிகள் பல்வேறு வகைப்படும். அவற்றுள் முக்கிய கம்பனிகள் பற்றிய சுருக்கமான விளக்கம் பின்வருமாறு:-




## வரையறுக்கப்பட்ட சொந்தக் கம்பனிகள்

பங்குதாரர்களின் எண்ணிக்கை ஒன்று முதல் ஐம்பது வரையிலானதாகவும், பங்குகளையும், தொகுதிக் கடன்களையும் பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியாதவையாகவும், பங்குகளைக் கைமாற்றம் செய்ய முடியாதனவாகவும் உள்ள கம்பனிகள் சொந்தக் கம்பனிகள் எனப்படும். இயக்குனர் எண்ணிக்கை குறைந்தது ஒன்றாகும்.

## வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள்

பங்குதாரர்களின் எண்ணிக்கை குறைந்தது ஒன்று ஆகவும் பங்குதாரர்களின் உச்ச எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படாததாகவும் உள்ளவை வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் ஆகும். இக் கம்பனிகள் பொது மக்களுக்கு பங்குகளையும், தொகுதிக் கடன்களையும் வழங்குவதோடு இக்கம்பனியின் பங்குதாரர்கள் தம்மிடமுள்ள பங்குகளை இலகுவாக கைமாற்றம் செய்யலாம். இயக்குனர் எண்ணிக்கை குறைந்தது இருவர் ஆகும்.

வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:-

* உரிமை பங்குதாரர்களினதாகும்.
* பங்கு விநியோகத்தின் மூலம் மூலதனம் திரட்டப்படுவதோடு பொதுக் கம்பனிகளில் தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலமும் நிதி திரட்டப்படும்.
* கம்பனிச் சட்டத்தின் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.
* பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும். பங்குதாரர் தாம் வாங்கிய பங்குகளின் முகப் பெறுமதியின் அளவிற்கே வகைகூற வேண்டியவர்களாவர்.
* சட்ட ஆளுமை உடையனவாக உள்ளதால் சட்டத்தின் முன்னிலையில் கம்பனியின் பெயரில் தோன்றக்கூடியதாக இருக்கும்.
* நீடித்த தன்மை காணப்படுகிறது.
* பணிப்பாளர் சபையினால் முகாமை செய்யப்படுகிறது.
* கணக்கு வைப்பும், கணக்காய்வும் கம்பனிச் சட்டத்தின் கீழ் கட்டாயமானதாகும்.

**கூட்டுறவுச் சங்கம்**

தனிநபர்கள் பலரினால் மூலதனமிடப்பட்டு, தமது பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்படும் அமைப்புக்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படும்.

தனியார் துறையிலுள்ள விசேட அமைப்பாகக் கருதப்படும் இக் கூட்டுறவுச் சங்க வணிக அமைப்பின் முக்கிய விடயங்கள் பின்வருவனவாகும்.:

* சனநாயக நிர்வாக முறை காணப்படல்.
* உறுப்பினர்கள் நலன்களுக்காகச் செயற்படல்.
* நலன்களை உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்தல்.
* உரிமை, உறுப்பினர்களினதாகும்.
* உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 10 ஆகும். உறுப்பினர்களின் உச்ச எண்ணிக்கைக்கு வரையறையில்லை.
* மூலதனம் உறுப்பினர்களால் இடப்படும்.
* கட்டாயமாக கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

* சட்ட ஆளுமையுடையது. கூட்டுறவுச் சங்கம் சட்டத்தின் முன்னிலையில் தனியாள் ஆகக் கருதப்படும்.
* நெடுவாழ்வுத் தன்மை காணப்படுகிறது.
* பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
* பணிப்பாளர் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படும்.
* கணக்குப் பதிவும் கணக்காய்வும் கட்டாயமானதாகும்.

## அரச துறை வணிக அமைப்புக்கள்.

சமூக நலன்களுக்காக பாரிய அளவிலான வணிக அமைப்புக்களை உருவாக்குவதற்கு தனியார் துறையினர் முன்வராத சந்தர்ப்பங்களில், அரச துறை அவ்வாறான அமைப்புக்களை ஆரம்பிப்பது இன்றியமையாததாகும். அரச துறை வணிக அமைப்புக்கள் பின்வரும் வகைகளாகக் காணப்படுகின்றன.

### அரச திணைக்களங்களின் வணிகங்கள்

முழுமையான அரச உரிமையுடன், அரச கொள்கைகளுக்கு இணங்க, வணிக நடவடிக்கைகளை மேற் கொள்ளும் அமைப்புக்கள் திணைக்களம் எனப்படும்.

திணைக்கள வணிகங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

* உரிமை பூரணமாக அரசினுடையதாகும்.
* மூலதனம் அரசின் வரவு செலவு திட்டத்தின் மூலமும், வேறு வகைகளிலும் இடப்படும்.
* நிர்வாகம், திணைக்கள உத்தியோகத்தர் மூலம் நடத்தப்படும்.
* சட்ட ஆளுமை இன்மையால், சட்ட நடவடிக்கைகளின் போது திணைக்களத் தலைவரே சட்டத்தின் முன்னிலையில் தோற்றவேண்டும்.
* நெடுவாழ்வுத் தன்மை உடையன.

### அரச கூட்டுத்தாபனங்களின் வணிகங்கள்

அரசின் முழு மூலதனத்துடனோ அல்லது ஒரு பகுதி மூலதனத்துடனோ விஷேட சட்டத்தின் மூலம் அல்லது கூட்டுத்தாபனங்களின் பொதுச் சட்டத்தின் மூலம் நிறுவப்படும் வணிக அமைப்புக்கள் கூட்டுத்தாபனம் எனப்படும்.



இலவச விநியோகத்திற்காக

அரச கூட்டுத்தாபனங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

* உரிமை அரசினதாகும்.
* மூலதனம் அரசினால் இடப்படுவதோடு, பொது மக்களும் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யலாம்.
* இவை சட்ட ஆளுமை உடையனவாகும்
* முகாமைத்துவம் பணிப்பாளர் சபை ஒன்றினால் நடாத்தப்படும்.

## அரச கம்பனிகள்

கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, மூலதனத்தில் 51% அல்லது அதற்குக் கூடுதலாக அரசினால் இடப்பட்டுள்ள வணிகங்கள் அரச கம்பனிகள் எனப்படும்.

அரச கம்பனிகள் ஏனைய கம்பனிகளிலிருந்து வேறுபடுவதற்கான முக்கிய அம்சங்கள் இக் கம்பனிகளின் உரிமையும், முகாமைத்துவமும் ஆகும். அரச கம்பனிகளின் மூலதனத்தின் பெரும் பங்கை அரசு இட்டிருப்பதால் முகாமைத்துவத்தின் பெரும் பகுதியை அரசே நிறைவேற்றுகிறது.

அரச கம்பனிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:-

* உரிமை முழுமையாகவோ அல்லது அதிக அளவிலோ அரசினுடைய தாகும்.
* மூலதனம் அரசினாலும், தனியார் துறையினாலும் இடப்படும்.
* பதிவு செய்தல் கட்டாயமானதாகும்.
* சட்ட ஆளுமை உடையது.
* பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
* முகாமை, பணிப்பாளர் சபை ஒன்றினால் நிறைவேற்றப்படும்.
* கணக்குப் பதிவும் கணக்காய்வும் கட்டாயமானது.

## முறைசாரா ஒழுங்கமைப்புக்கள்

ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களுக்குட்படாமல் வணிக நடவடிக்கைகளை முறையான செயற்பாடுகளுக்குப் புறம்பாக நடாத்தும் அமைப்புக்கள் முறைசாரா ஒழுங்கமைப்புக்கள் எனப்படும்.

உதாரணமாக: வட்டிக்கு கடன் கொடுக்கும் தனிப்பட்ட நபர்கள் சொத்துக்களைப் பிணையாக ஏற்றுக் கொண்டு, கடன் வழங்கும் தொழிலைக் கொண்டு நடத்துவதைக் குறிப்பிடலாம். முறைசாரா ஒழுங்கமைப்புக்களின் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:-

* உரிமை உறுப்பினர்களுடையதாகும்
* உறுப்பினர்களால் மூலதனம் இடப்படும்.
* பெரும்பாலும் நெடுவாழ்வுத் தன்மையற்றுக் காணப்படும்.
* சட்ட ஆளுமை அற்றனவாகும்.

மேலே விபரிக்கப்பட்ட வணிக அமைப்புக்களின் முக்கிய அம்சங்களின் சுருக்கமான விளக்கம் பின்வருமாறு:

## வணிகத்தின் பதிவு

ஒரு வணிகத்தை ஆரம்பிக்கும் போது குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் ஏற்புடைமை பதிவு எனப்படும்.

தனியுரிமை வணிகங்களும், பங்குடைமைவணிகங்களும், உரிமையாளரின் பெயரிலன்றி, வேறு பெயர்களில் நடத்தப்படுவதாயின் அவ் வணிகப் பெயர் பதிவு செய்யப்படவேண்டும். உரிமையாளரின் பெயரில் நடத்தப்படுவதாயின் பதிவு செய்தல் கட்டாயமில்லை. வரையறுக்கப்பட்ட கம்பனிகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிப் பதிவாளரிடம் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் 1972 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.எவ்வகை வணிகமெனினும் அதனைப் பதிவு செய்வதால், நடைமுறையில் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## சட்டத்தின் முன் தனியாளாகக் கருதுதல்

ஒருவணிக நிறுவனத்திற்கு சட்டத்தின் முன்னிலையில் வணிகத்தின் பெயரில் ஒரு மனிதனைப் போன்று தோற்ற முடியுமாக இருத்தல், சட்டத்தின் முன் தனியாள் எனப்படும். இதைச் சட்ட ஆளுமை எனவும் கூறப்படும்.

தனியுரிமை வணிகங்கள், பங்குடைமை வணிகங்கள் என்பவற்றிற்குத் தமது வியாபாரப் பெயரில் சட்டத்தின் முன்னிலையில் 'தனியாள்'ஆகத் தோற்றமுடியாது. ஏனெனில் இவற்றுக்கு சட்டஆளுமை இல்லை. வரையறுக்கப்பட்ட கம்பனிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் சட்ட ரீதியாகத் 'தனியாள்' ஆகக் கருதப்படும்.



இலவச விநியோகத்திற்காக

### பொறுப்புக்கள்

வணிகமொன்று செலுத்த வேண்டிய புறக் கடன்கள் பொறுப்புக்கள் எனப்படும்.

தனியுரிமை வணிகங்களினதும், பங்குடைமை வணிகங்களினதும் பொறுப்புக்கள் வரையறுக்கப்படாததால் அவை நட்டமடைந்து முறிவுற்றால் புறக் கடன்களைச் செலுத்துவதற்காக உரிமையாளரின் சொந்தச் சொத்துக்களையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். வரையறுக்கப்பட்ட கம்பனிகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றின் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவற்றின் பங்குதாரர்களும். உறுப்பினர்களும் தாம் வாங்கிய பங்குகளின் முகப் பெறுமதியின் அளவுக்கே பொறுப்புடையவர்களாவர்.

### முகாமைத்துவம்.

வணிகத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, வழிப்படுத்தி, கட்டுப்படுத்தி, தொடர்புபடுத்தி, நெறிப்படுத்தி, செயற்படுத்துவது முகாமை எனப்படும். நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதற்காக, கிடைக்கக்கூடிய வளங்களைத் திறனாக, உச்சப் பயன் அடையத் தக்கதாக ஈடுபடுத்துவது முகாமை எனப்படும்.

தனியுரிமை வணிகங்களில் உரிமையாளரும், பங்குடைமை வணிகங்களில் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவாறு பங்காளரும் வணிகத்தை முகாமை செய்வர். ஆனால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் பணிப்பாளர் சபையினரே முகாமையை மேற்கொள்வர்.

### இலாப நட்டம்

வணிகச் செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப் பெறும் மிகை இலாபம் எனவும் குறைவு நட்டம் எனவும் அழைக்கப்படும்.

வணிகத்தின் இலாபம் அல்லது நட்டம் தனியுரிமைகளில் உரிமையாளரையும், பங்குடைமைகளில் பங்குடைமை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விகிதத்தில், அல்லது சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு சமனாக பங்காளரைச் சாரும். வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் பங்குதாரரின் பங்குகளின் பெறுமதிக்கேற்ப இலாபம் பகிரப்படும்.

## கணக்கு வைத்தலும், கணக்காய்வும்.

வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் தகவல்கள் என்பவற்றைப் பதிந்து அறிக்கையிடல் கணக்கு வைத்தல் எனப்படும். அறிக்கையிடப்பட்ட தகவல்கள் பிழையின்றிப் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதைப் பரிசீலித்தல் கணக்காய்வு எனப்படும்.

தனியுரிமை வணிகங்களிலும் பங்குடைமை வணிகங்களிலும் கணக்கு வைத்தலும் கணக்காய்வு செய்தலும் கட்டாயமானவையல்ல. எனினும் வணிகத்தின் நலனுக்காகவும், அரசுக்குக் கொடுக்க வேண்டிய சிற்சில கொடுப்பனவுகளை உறுதிசெய்வதற்காகவும் கணக்கு வைத்தல் முக்கியமாகும். வரையறுக்கப்பட்ட கம்பனிகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் கணக்கு வைத்தலும், கணக்காய்வும் கட்டாயமானதாகக் கருதப்படுகிறது.

## நீடித்த வாழ்வு

ஒரு வணிக முயற்சி தொடர்ந்து நீண்ட காலமாக நிலைத்திருத்தல் நீடித்த வாழ்வு அல்லது நெடுவாழ்வு எனப்படும்.

தனியுரிமை வணிகங்களும், பங்குடைமை வணிகங்களும் உரிமையாளரின் பங்களிப்பிலேயே தங்கிக் காணப்படுகின்றன. இதனால் உரிமையாளரின் சொந்த வாழ்வில் ஏற்படும் விளைவுகள், குறிப்பிட்ட வணிகங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றதால் இவ் வணிக அமைப்புக்கள் பெரும்பாலும் நெடுவாழ்வு த்தன்மை அற்றனவாகவே காணப்படுகின்றன. எனினும் வரையறுக்கப்பட்ட கம்பனிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் பெருமளவில் தொடர்ச்சியான நீடித்த நெடுவாழ்வுடையனவாகவே அமைகின்றன.



இலவச விநியோகத்திற்காக

**இதுவரை நாம் கற்ற, வணிக அமைப்புக்கள் பற்றிய தகவல்களைப் பின்வருமாறு சுருக்கமாக அட்டவணைப்படுத்தலாம்.**

| வணிக அமைப்பு | உரிமை | மூலதனம் | பதிவு | சட்ட ரீதியான அந்தஸ்து | பொறுப்புக்கள் | முகாமை | இலாப நட்டம் | கணக்குவைத்தலும் கணக்காய்வும் | தொடர்ச்சியான வாழ்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தனியுரிமை வணிகம் | மூலதனத்தை இட்டவருக்கு | உரிமையாளரின் சேமிப்பு, குடும்ப உறுப்பினர் களிடமிருந்து பெறப்பட்ட பணம், கடன் கொள்வனவுகள், | கட்டாயம் இல்லை | சட்ட ஆளுமை இல்லை | வரையறுக்கப் படாதது | உரிமையாளர் மூலம் | உரிமையா ளரைச் சாரும். | கட்டாயமில்லை | நெடுவாழ்வு இல்லை |
| பங்குடமை வணிகங்கள் | பங்காளருக்கு (2 முதல் 20 பேர் வரை இடம்பெறலாம்) | பங்காளரே மூலதனத்தை இடுவர். | கட்டாயம் இல்லை | சட்ட ஆளுமை இல்லை | வரையறுக்கப் படாதது. | பங்காளர்களின் மூலம் | எழுத்திலான ஒப்பந்தம் இருப்பின் அதற்கேற்பவும், 1890ஆம் ஆண்டின்பங்குடமைச் சட்டத்திற்கேற்ப சமமாகவும் பகிரப்படும். | கட்டாயமில்லை | நெடுவாழ்வுத் தன்மை இல்லை. |
| வரையறுக்கப்பட்ட கம்பனிகள் | பங்குகளை வாங்கிய பங்குதாரர் களுக்கு | பங்குகளை வழங்குவதன் மூலம் பெறப் படும் | கட்டாய மானது | சட்ட ஆளுமை உண்டு. | வரையறுக்கப் பட்டது | பணிப்பாளர் சபை மூலம் | பங்குதாரர்கள் வாங்கியுள்ள பங்குகளுக்கேற்ப | கட்டாயமானது | நெடுவாழ்வுத் தன்மை காணப்படும். |
| கூட்டுறவுச் சங்கங்கள் | உறுப்பினர் களைச்சாரும். (உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 முதல் எத்தனை பேரும் இருக்கலாம்.) | உறுப்பினர்கள் மூலம் | கட்டாய மானது | சட்ட ஆளுமை உண்டு. | வரையறுக்கப் பட்டது. | பணிப்பாளர் சபை மூலம் | உறுப்பினர் கூட்டுறவு சங்கத்துடன் நடத்திய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியின் அடிப்படையில் | கட்டாயமானது | நெடுவாழ்வுத் தன்மை உடையது. |

சிறிய நடுத்தர வணிகங்கள் பெரும்பாலும் தனியுரிமை வணிகங்களாகவோ அல்லது பங்குடைமை வணிகங்களாகவோ காணப்படுகின்றன. அவற்றினதும் வரையறுக்கப்பட்ட கம்பனிகள், வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றினதும் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் என்பன பின்வரும் அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

| வணிக அமைப்பு | அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|---|
| தனியுரிமை வணிகம் | 1.குறைந்த மூலதனத்துடன் ஆரம்பிக்கலாம்.<br>2.சட்டக் கட்டுப்பாடுகள் மிகக் குறைவு<br>3.வணிக முயற்சிகளில் நேரடியாக ஈடுபடலாம்<br>4.ஆரம்பித்தற் செலவுகள் குறைவு<br>5.இலாபம் முழுவதும் உரிமையாளருக்குரியதாகும் | 1.பொறுப்புக்கள் வரையறுக்கப் படாமை<br>2. நெடுவாழ்வுத் தன்மை அற்றது<br>3. மூலதனத்தைத் திரட்டும் வழிகள் குறைவு<br>4. சகல தீர்மானங்களுக்கும் தனித்தே பொறுப்புடையவர்.<br>5. உரிமையாளரின் தனிப்பட்ட நிலைமைகள் வணிகத்தைப் பாதிக்கும்<br>6. தனியே மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சிலவேளை வெற்றி அளிக்காது போகலாம். |
| பங்குடைமை வணிகம் | 1.ஆரம்பித்தல் இலகு<br>2.மேலதிக மூலதனத்தைப் பெற்றுக் கொள்வது இலகு<br>3.முகாமை பங்காளர்களால் நடத்தப்படுகிறது<br>4.கூட்டுப் பொறுப்பு<br>5.தீர்மானம் எடுக்கும் போது பலரின் கருத்துக்களும் பெறப்படும | 1. பொறுப்புக்கள் வரையறுக்கப்படாமை<br>2. நெடுவாழ்வுத் தன்மை குறைவு<br>3. உடனடித் தீர்மானம் மேற் கொள்ள முடியாமை<br>4. ஒரு பங்காளரின் செயல்களுக்கு ஏனைய பங்காளர்களும் பொறுப்புக் கூறவேண்டும்.<br>5. சட்ட ஆளுமை இல்லை<br>6. கணக்குப் பதிதல் அவசியமில்லை |

| | | |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட கம்பனிகள் | 1. பொறுப்பு வரையறுக்கப்பட்டது<br>2. நெடுவாழ்வுத்தன்மையுண்டு<br>3. மூலதனத்தைப் பரவலாகத் திரட்டலாம்<br>4. சட்ட ஆளுமை இருப்பதால் கம்பனியின் பெயரில் சட்டத்தின் முன் தனிமனிதனாகத் தோன்றலாம்<br>5. பணிப்பாளர் சபையொன்றினால் நிர்வாகம் நடத்தப்படும் | 1. சட்டக் கட்டுப்பாடுகள் அதிகம்<br>2. அறிக்கைகள் வைத்திருத்தல் மிக அவசியம்.<br>3. இரட்டைவரி அறவிடுகைக்கு உட்படல்<br>4. பெரிய அளவிலானதால், உற்பத்திக் கிரயம் அதிகரித்துக் காணப்படல்<br>5. கூடிய பங்கு வாங்கியோரின் ஆதிக்கம் அதிகம்.<br>6. கடன் கொடுத்தோரின் தலையீடு அதிகம் |
| கூட்டுறவுச் சங்கங்கள் | 1. எல்லா உறுப்பினர்களுக்கும் சமமான உரிமை<br>2. அரச ஒத்தழைப்புக் கிடைத்தல் | 1. மூலதனத்திரட்டு போதாமை<br>2. முகாமைத்துவத்திறன் போதியதாக இன்மை |



**செயற்பாடு**

(1) உங்கள் பிரதேசத்தில் பொதுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பல்வேறு நபர்கள் பல்வேறுவகைகளில் வணிக ஒழுங்கமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர் எனக் கருதிக் கொள்க. அவ் ஒழுங்கமைப்புக்களை முறைசார்வணிக ஒழுங்கமைப்புக்கள், முறைசாரா வணிக ஒழுங்கமைப்புக்கள் என வகைப்படுத்தி உதாரணங்களுடன் அறிக்கை இடுக.

(2) உங்கள் நாளாந்த நுகர்வுத் வேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக பயன்படுத்தப்படும் பொருட்கள்,சேவைகள் என்பவற்றின் 10 வகைகளைப் பெயரிடுக. அவை ஒவ்வொன்றையும் உங்களுக்கு வழங்கும் வணிக அமைப்புகளையும் குறிப்பிடுக.

(3) வணிக அமைப்புக்களின் அடிப்படை அம்சங்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வணிக அமைப்பு | உரிமை | மூலதனம் இடுகை | பொறுப்பு | முகாமை | சட்ட ஆளுமை |
|---|---|---|---|---|---|
| <u>தனியார் துறை</u> | | | | | |
| தனியுரிமை | ............. | ................ | ................ | ............... | இல்லை |
| பங்குடைமை | ............. | ................ | வரையறுக் கப்படாதது | ............... | ............. |
| வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி | ............ | ............. | ................ | இலாபம் பெறுதல் | .............. |



(4) உங்கள் பிரதேசத்தில் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வணிக அமைப்புக்கள் பற்றி கவனம் செலுத்துக. பின்வரும் விடயங்கள் பற்றி அவதானித்து அறிக்கையொன்றைத் தயாரிக்குக

* வணிக முயற்சியை ஆரம்பித்த திகதி
* அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள்
* மூலதனத்தைப் பெற்றுக் கொண்ட முறைகள்
* முகாமைத்துவம்.

## வணிகக் கருத்துக்குப் பொருத்தமான வணிக ஒழுங்கமைப்பு வகைகளைத் தெரிவு செய்தல்.

வணிக கருத்தினை செயற்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் பல உள. இவற்றுள் முக்கிய விடயம் பொருத்தமான ஒழுங்கமைப்பொன்றைத் தெரிவு செய்வதாகும். வணிக அமைப்பு முறையொன்றைத் தெரிவு செய்யும் போது பல விடயங்கள் பற்றிக் கவனத்திற் கொள்ள வேண்டும். அவற்றுள் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்.

* வணிகத்தின் அளவு
* நீடித்த தன்மை
* வணிகத்தின் இயல்பு
* மூலதனத் தேவைகள்
* சட்டத் தேவைகள்
* தனிப்பட்ட விருப்பங்கள்
* பொறுப்புக்கள்.
* சட்ட ஆளுமை
* முகாமைத்துவமும், நிர்வாக முறையும்

## வணிகத்தின் அளவு

வணிகத்தின் அளவைத் தீர்மானிக்கும் போது பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

* முதலீடு செய்த மூலதனத்தின் அளவு
* சந்தையும், விற்பனைப் புரள்வும்.
* ஊழியர் தொகை
* பயன்படுத்தப்படும் வலுவும், அதன் அளவும்.
* நிலையான சொத்துக்களில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின்அளவு
* நடைமுறைச் சொத்துக்களில் முதலிடப்படும் அளவு போன்றனவாகும்.

**வணிக அமைப்புக்கள், அளவின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படும்:-**

* சிறிய அளவு வணிக அமைப்புக்கள்.
* நடுத்தர அளவு வணிக அமைப்புக்கள்.
* பாரிய அளவு வணிக அமைப்புக்கள்.

## வணிகத்தின் இயல்பு

வணிகச் செயற்பாடுகளை அவற்றின் இயல்புகளுக் கேற்ப பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

* உற்பத்தித்துறை வணிகங்கள்
* வியாபாரச் செயற்பாட்டு வணிகங்கள்.
* சேவைத் தொழில் வணிகங்கள்.



பட இல. 2

பொருட்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழில் அமைப்புக்கள் உற்பத்தித் துறை வணிகங்கள் எனப்படும்.

பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் அமைப்புக்கள் வியாபார வணிகங்கள் எனப்படும்.

ஏதோ ஒரு தரப்பினருக்கு சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள் சேவைத் தொழில் வணிகங்கள் எனப்படும்.

## சட்டத் தேவைகள்

வணிக அமைப்பொன்றின் வகை, தன்மை எனபனவற்றுக்கேற்ப அதனை ஆரம்பிக்கும் போதும், கொண்டு நடத்தும் போதும் நிறைவேற்ற வேண்டிய சட்ட ரீதியான விடயங்களே சட்டத் தேவைகள் எனப்படும்.

ஒரு வணிகத்தை ஆரம்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய சட்டத்தேவைகள் உள்ளன. சிலவகை வணிகங்களைத் தொடங்க வேண்டுமெனில்அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், இதற்காக உரிய அதிகாரியிடமிருந்து அங்கீகாரத்தையும் பெறுதல் வேண்டும்.

**உதாரணம்**

* மேற்கத்தேய மருந்துப் பொருட்கள் விற்பனைக்கு சுகாதார அமைச்சி டமிருந்து அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும்.

* வானொலிப் பெட்டி திருத்தம் செய்தல் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலிருந்து அனுமதிப் பத்திரம் பெறல் வேண்டும்.

  ஒரு வணிகத்தை ஆரம்பித்து கொண்டு நடாத்தும் போது பின்பற்ற வேண்டிய சட்டத் தேவைகள் பல உள்ளன. அவற்றுள் சில பின்வருவன வாகும்.

* தனியுரிமை, பங்குடைமைஆகிய வணிக அமைப்புக்கள் உரிமையா ளரின் பெயரிலன்றி வேறு ஏதாவது பெயரில் நடாத்தப்படுவதாயின் அவ் வணிகம் பதிவு செய்யப்பட வேண்டும்.

* வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்

* அரசாங்கத்தின் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஏற்ப வணிக நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். முக்கியமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

    * நுகர்வோர் அதிகார சபைச் சட்டம்.
    * ஊழியர் சம்பந்தமான சட்டங்கள்.
    * வியாபாரச் சட்டங்கள்.
    * வருமான வரிச் சட்டங்கள்.

## பொறுப்புக்கள்

வணிகமொன்றிற்கு மூலதனமிடும் நபர்கள் அவ் வணிகத்திற்காக வகை கூறவேண்டியவர்களாக உள்ளமை பொறுப்புக்கள் எனப்படும். சில வணிக அமைப்புக்களில் வகைகூறல் எனும் பொறுப்புக்கள் உரிமையாளரைச் சார்ந்ததாகும்.



இலவச விநியோகத்திற்காக

**உதாரணமாக**

தனியுரிமை வணிகங்கள், பங்குடைமை வணிகங்கள் என்பனவற்றின் உரிமையாளர்கள் வரையறுக்கப்படாத பொறுப்பு உடையவர்களாவர். எனினும் வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் இப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும். அதாவது பங்குதாரர்களின் பொறுப்பு அவர்கள் வாங்கிய பங்குகளின் முகப் பெறுமதியின் அளவுக்கு வரையறுக்கப்பட்டதாகும்.வணிகக் கருத்தின் படி பொறுப்பேற்றல் ஒரு தனி நபரையே சார வேண்டுமெனில் தனியுரிமை வணிகத்தையும், பொறுப்பு பலரைச் சார்ந்திருக்க வேண்டும் எனில் பங்குடமை வணிகத்தையும் தெரிவு செய்து கொள்வது பொருத்தமானதாகும்.

## முகாமைத்துவமும், நிர்வாக முறையும்

வளங்களைத் திறனாக ஈடுபடுத்தி, ஒழுங்கமைப்பின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் சிறப்பாக நிறைவேற்றிக் கொள்வதற்கான செயற்பாடே முகாமை எனப்படும்.

நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வளங்களை ஒழுங்கான முறையில் ஈடுபடுத்தல் நிர்வாகம் எனப்படும்.

தனியுரிமை ஒன்றில் ஒரு தனிநபராலும், பங்குடைமைகளில் பங்காளர்களின் ஒருமித்த உடன்பாட்டின் படியும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் பணிப்பாளர் சபையினால் முகாமை செய்யப்படும்.

ஒரு தனி நபர் தாமே தனது வணிக முயற்சிகளைக் கொண்டு நடாத்த முடியுமெனக் கருதினால் தனியுரிமை வணிகத்தையும், ஏனையோருடன் சேர்ந்து தீர்மானங்கள் மேற்கொள்ளவும் செயற்படவும் விரும்பினால் பங்குடமை வணிகத்தையும் தெரிவு செய்வது பொருத்தமானதாகும்.

## தொடர்ச்சியும், நீடித்த நிலைப்பாடும்

தொடர்ச்சி என்பது வணிகம் தொடர்ச்சியாக நீடித்து நடாத்தப்பட்டு வருவதாகும். தனியுரிமை வணிகங்களும், பங்குடைமை வணிகங்களும் நீடித்து நிலைக்காததற்குக் காரணம் சம்பந்தப்பட்ட தனிநபர் அல்லது நபர்கள் முகங் கொடுக்க வேண்டிய நிலைமைகள் ஆகும். எனினும் உரிமையாளர்களிலும் வேறுபட்ட நடைமுறைகள் வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் காணப்படுவதால் அவற்றில் நீடித்து நிலைக்கும் தன்மை காணப்படுகின்றன. பங்குதாரர்களின் உரிமை மாறினாலும் வரையறுத்த கம்பனிகள் நெடுவாழ்வுத் தன்மை உடையன.

## சட்ட ஆளுமை

தனியுடமையும் பங்குடமையும் சட்ட ஆளுமை அற்றவை. ஆனால் கம்பனியும் கூட்டுறவுச் சங்கமும் சட்ட ஆளுமை உடையவையாக இருப்பதால் இவ்வமைப்புகள் தமது பெயரில் சட்டத்தின் முன் தோன்றி சட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம்.

## மூலதனத் தேவைகள்

வணிக நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவதற்காக மூலதனம் அவசியமாகும். இதன் காரணமாக வணிகத்தின் உரிமையாளர்களால் மூலதனம் இடப்படும். தனியுரிமை வணிகங்களில் தனித்து உரிமையாளரால் மூலதனமிடப்படுவதோடு, பங்குடைமை வணிகங்களில் பங்காளர்களால் உடன்பட்டுக் கொண்ட அளவில் மூலதனம் இடப்படும். வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பங்குகளை விநியோகித்து மூலதனத்தைத் திரட்டிக் கொள்கின்றன.வணிகக் கருத்தைச் செயற்படுத்துவதற்காக சிற்றளவு மூலதனம் தேவைப்படின் தனியுரிமை அல்லது பங்குடைமை பொருத்தமானதாகும்.

## தனிப்பட்ட விருப்பங்கள்

சில வணிகர்கள் சுதந்திரமாகச் செயற்படுதவற்கு விரும்புவர். சிலர் வேறு நபர்களிடம் விஷேட ஆலோசனைகளைப் பெற விரும்புவர். இதன் அடிப்படையில் ஒவ்வொரு தனிநபரும் தத்தமது மனப்பாங்குகளுக்கேற்ப வணிக அமைப்பைத் தெரிவு செய்து கொள்வர். சுய விருப்பின் பேரில் செயற்பட விருப்பமெனில் தனியுரிமை வணிகமும், ஏனையோரின் கருத்துக்களுக்கும் தீர்மானங்களுக்கும் உடன்பட்டுச் செயற்படுவதற்கு விருப்பமெனில் பங்குடைமை வணிகமும் பொருத் தமானதாகும். விசேட தகைமை உள்ளவர்களுக்கு முகாமைச் செயற்பாடுகளை ஒப்படைப்பதற்கு விரும்புவோருக்கு வரையறுக்கப்பட்ட கம்பனி மிகவும் சிறந்ததாகும். வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்வதற்கான நியதிகளின் அடிப்படையில் தனிப்பட்ட விருப்பங்களுக்கேற்ப வணிக முயற்சியொன்றை ஆரம்பிக்கலாம்.

வணிக உத்தேசத்திற்குப் பொருத்தமான வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்யும் போது பல்வேறு விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டும்.சிறந்த வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்வதற்கான மாதிரியொன்று பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

நான்கு மகளிர் பாடசாலைகளின் மாணவியருக்குப் பாடசாலைச் சீருடை தயாரிப்பதற்கான கட்டளை பெறப்பட்டு ஒரு வணிக நிறுவனத்தை நடாத்து வதற்கான தேவை ஏற்படுகிறது.

இதன்படி முயற்சியாண்மையாளரொருவர் வணிக ஒழுங்கமைப்பு ஒன்றினைத் தெரிவு செய்வதற்காக, பின்வரும் தகவல் அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| தெரிவு செய்வதற்கான நியதிகள் | தேர்ந்தெடுக்கப்படுவதற்கான காரணிகள் | பொருத்தமான வணிக ஒழுங்கமைப்பு |
|---|---|---|
| 1. வணிகத்தின் அளவு | வியாபாரம் நான்கு பாடசாலைகளுடன் மட்டுப்படுத்தப்படுவதால் சிறிய அளவு வணிகமாக அமைதல் | தனியுரிமை வணிகம்<br>பங்குடைமை வணிகம் |
| 2. வணிகத்தின் இயல்பு | இது ஒரு சேவை வியாபாரமாகும்<br>அனுபவமும், விஷேட திறனும் உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இயலுமானதாக இருத்தல். | பங்குடைமை வணிகம்<br>தனியுரிமை வணிகம் |
| 3. சட்டத் தேவைகள் | பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை.<br>ஆரம்பிப்பதற்கான சட்ட விதிகள் குறைவு. | தனியுரிமை வணிகம்<br>பங்குடைமை வணிகம் |
| 4. பொறுப்புகள் | வணிக நடவடிக்கைகளுக்காக வெளி நபர்களுடனான கடப்பாடு வரையறுக்கப்படாததாகும்.<br>சில சந்தர்ப்பங்களில் சொந்தச்சொத்துக்களையும் இழக்கவேண்டி ஏற்படும். | தனியுரிமை வணிகம் |
| | பொறுப்புக்கள் பலரிடையே பரவலாக்கப்பட வேண்டுமெனின் தெரிவு செய்ய வேண்டியது அவசியம் | பங்குடைமை வணிகம் |

| | | |
|---|---|---|
| 5 முகாமைத்துவமும் நிர்வாக முறையும் இருத்தல் | * உரிமையாளருக்கு முகாமைத்திறன் இருத்தல் | தனியுரிமை வணிகம் |
| | * முகாமைக்காக பலரின் ஒத்துழைப்பு தேவைப்படல் | பங்குடைமை வணிகம் |
| | * முகாமை விசேட திறன் உள்ளோரால் நடாத்தப்பட வேண்டுமென்பதால் | வரையறுக்கப்பட்ட கம்பனி |
| 6. தொடர்ச்சியும் சட்டநிலைப்பாடும் | * வணிகரின் ஊக்கத்தின் காரணமாக வணிகச் செயற்பாடு இடை நடுவில் முடிவடையாது தொடர்ந்து இயங்குவதற்காக | வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி |
| 7. மூலதனத் தேவைகள் | * தேவைப்படும்மூலதனத் தொகையை தனித்து முதலிட இயலுமா என அறிதல். அவ்வாறு முடியுமாயின் | தனியுரிமை வணிகம் |
| | மூலதனத்தைத் தனித்து முதலிட முடியாதவிடத்து | பங்குடைமை வணிகம் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி |
| 8. தனிப்பட்ட விருப்பங்கள் | * சுயாதீனமாகச் செயற்படுவதற்கு விருப்பமெனில் | தனியுரிமை வணிகம் |
| | * ஏனையோரின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள விருப்பமெனில் | பங்குடைமை வணிகம் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி |
| 9. சட்ட ஆளுமை | * சட்டத்தின் முன் தனிமனிதனாகக் கருதமுடியாமை, சட்டத்தின் முன் தனிமனிதனாகக் கருதுதல் | கம்பனி அமைப்புகள் |



இலவச விநியோகத்திற்காக

பல்வேறு நியதிகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான வணிக அமைப்பைத் தீர்மானிப்பதற்கு தகவல் அட்டவணையைப் பயன்படுத்துவர்.

வணிக அபிலாசைக்குப் பொருத்தமான வணிக ஒழுங்கமைப்பு ஒன்றினைத் தெரிவுசெய்வதற்கு தகவல் அட்டவணைஒன்றைத் தயார் செய்து தீர்மானம் மேற்கொள்ளலாம். கீழே காட்டப்பட்டுள்ளவாறு தகவல் அட்டவணையொன்றைப் பயன்படுத்தலாம்.

| நியதிகள் | தனியுரிமை வணிகம் | பங்குடைமை வணிகம் | வரையறுக்கப்பட்ட கம்பனிகள் |
|---|---|---|---|
| 1. சந்தை சிறிய அளவினதாக இருப்பின் | ✔ | ✔ | ✕ |
| 2. சுயவிருப்பின்படி தீர்மானம் எடுத்தல் | ✔ | ✔ | ✕ |
| 3. மூலதனத் தேவை சிறிய அளவாயின் | ✔ | ✔ | ✕ |
| 4. சட்டக் கட்டுப்பாடுகள் குறைவாயின் | ✔ | ✔ | ✕ |
| 5. பொறுப்பு வரையறுக்கப் படாததெனின் | ✕ | ✕ | ✔ |
| 6. நீடித்த வாழ்வுடையதாயின் | ✕ | ✕ | ✔ |

பொருத்தமுடையதாயின் சரி (✔) அடையாளமும், பொருத்தமற்றதாயின் பிழை (✕) அடையாளமும் இடப்பட்டுள்ளது.



**செயற்பாடு.**

1. உங்கள் பிரதேசத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கக் கூடிய வணிக ஒழுங்கமைப்பொன்றைக் குறிப்பிட்டு, அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

2. மேற்படி வணிக ஒழுங்கமைப்புக்களை தேர்ந்தெடுப்பதற்காக தகவல் அட்டவணை ஒன்றைத் தயார் செய்க.


இலவச விநியோகத்திற்காக

3. பின்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

| தெரிவு செய்வதற்கான நியதிகள் | தேர்ந்தெடுப்பதற்கான காரணிகள் | பொருத்தமான வணிக ஒழுங்கமைப்பு |
|---|---|---|
| 1. வணிகத்தின் அளவு | * சந்தை குறுகியதாகக் காணப்படுதல்<br>* சிற்றளவு வணிகமாக அமைதல் | 1) ..............................<br>2) .............................. |
| 2. வணிகத்தின்இயல்பு | * .................................<br>* ................................. | 1) தனியுரிமை வணிகம்<br>2) பங்குடைமை வணிகம் |
| 3. சட்டத் தேவைகள் செய்யவேண்டுமென்ற அவசியமில்லை | * கட்டாயமாகப் பதிவு<br>* ஆரம்பிப்பதற்கான சட்டவிதிகள் குறைவு | 1) ..............................<br>2) .............................. |
| 4. பொறுப்புக்கள் | * .................................<br>.................................<br>.................................<br>* .................................<br>.................................<br>................................. | 1) தனியுரிமை வணிகம்<br>2) பங்குடைமை வணிகம் |
| 5. ................................ | * உரிமையாளனுக்கு முகாமைத்திறன்இருத்தல்<br>* முகாமைக்காக பலரின் ஒத்துழைப்புத் தேவைப்படுதல்.<br>* முகாமை விசேட திறன் உள்ளோரால் நடத்தப்படல் | 1) தனியுரிமை வணிகம்<br>2) பங்குடைமைவணிகம்<br>3) வரையறுக்கப்பட்ட கம்பனி |
| 6. தொடர்ச்சியும் சட்டநிலைப்பாடும் | * வணிகரின் ஊக்கத்திறன் காரணமாக வணிகச் செயற்பாடுகள் இடைநடுவில் முடிவடையாதுதொடர்ந்து இயங்குவதற்காக | 1) ...............................<br>............................... |



இலவச விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| 7.மூலதனத்தேவைகள் | * ..................................... .....................................<br>* ..................................... .....................................<br>* ..................................... ..................................... | 1) தனியுரிமைவணிகம்<br>2) பங்குடைமை வணிகம்<br>3) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி |
| 8.தனிப்பட்ட விருப்பங்கள் | * சுயாதீனமாகச் செயற்படுவதற்கு விருப்பமெனில்<br>* ஏனையோரின்உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பமெனில் | 1) ..............................<br>2) .............................. |

**வணிக ஒழுங்கமைப்புக்களை ஆரம்பிப்பதில் பின்பற்ற வேண்டிய சட்ட நிலைமைகள்**

எல்லா வகையான வணிக அமைப்புக்களையும் ஒரே தன்மையானதாக ஆரம்பிப்பது இல்லை. சில வணிக அமைப்புக்களை மிக இலகுவாக ஆரம்பிக்கலாம். சில வணிக அமைப்புக்களை ஆரம்பிப்பதற்குப் பல்வேறு சட்டவிதிகளைப் பின்னபற்ற வேண்டும்.ஒவ்வொரு வணிக அமைப்புக்களையும் ஆரம்பிப்பதற்காகப் பதிவு செய்யப்படும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பின்வருவனவாகும்.

**வணிக அமைப்பொன்றினைப் பதிவு செய்வதால் பெறப்படும் அனுகூலங்கள்**

1. பதிவு செய்வதால் குறிப்பிட்ட வணிகத்திற்கு ஏறப்புடைமை/அங்கீகாரம் கிடைக்கப் பெறுகின்றது.
2. பல்வேறு அரச உதவிகள் கிடைப்பதற்காகப் பதிவினை முன்வைக்கலாம்.
3. பல்வேறு நிர்வாகப் பிரிவுகளுக்கு (மாகாணசபை,உள்ளூராட்சிச் சபைகள்) ஏறப்புடையதான வணிகம் சம்பந்தப்பட்ட தரவுகளைத் திரட்டுவது இலகு வாக அமையும்.
4. உற்பத்திகளைச் சந்தைக்கு விநியோகிக்கும் போது பதிவு செய்யப்பட்ட இலக்கம் காரணமாக நுகர்வோனின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## தனியுரிமை அமைப்புக்களையும் பங்குடைமை வணிகங்களையும் பதிவு செய்தல்

இவ்வகை வணிகங்களின் பெயர்களை உரிமையாளர் தமது பெயரிலேயே நடாத்திச் செல்வதாயின் பதிவு செய்தல் அவசியமில்லை.எனினும் தமது பெயரிலல்லாது வேறு பெயர்களில் வணிகத்தை நடாத்திச் செல்வதாயின் 1918 ஆம் ஆண்டின் 06 ம் இலக்க வியாபார பெயர்ப்பதிவுச் சட்டத்தின் கீழ் மாகாண சபை விதிகளுக்கேற்ப மாகாண வணிக பெயர்ப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை உரிய கட்டணத்துடன் உரிய அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை பரிசீலித்தபின் வணிகத்தைப் பதிவு செய்ததற்கான சான்றுப் பத்திரம் வழங்கப்படும்.இப் பத்திரத்தை வணிக நிலையத்தில் பார்வைக்காக வைத்திருத்தல் வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட கம்பனிகளைப் பதிவு செய்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் கொழும்பு கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.பதிவு செய்வதற்காகப் பின்வரும் ஆவணங்களுடன் ஆரம்பிப்போர் கையொப்பமிட்ட விண்ணப்பப் பத்திரத்தை கம்பனி பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(1) அமைப்பு அகவிதிப் பத்திரம்
(2) பதிவு செய்வதற்கான விண்ணப்பம்
(3) கம்பனி இயக்குனரின் சம்மதமும் சான்றிதழும்
(4) கம்பனி செயலாளரின் சம்மதமும் சான்றிதழும்

மேற்படி ஆவணங்களைக் கம்பனிப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இவை ஏற்றுக் கொள்ளப்படின், கம்பனிப் பதிவாளர் கம்பனியைப் பதிவு செய்து 'கம்பனி உருவாக்கற் பத்திரம்' எனும் பதிவுச் சான்றிதழை வழங்குவார்.

புதிய கம்பனி சட்டத்தின்படி தனியார், பொதுக் கம்பனிகள் உருவாக்கல்பத்திரத்தைப் பெற்றவுடன் வியாபாரத்தை ஆரம்பிக்கலாம்.

### வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல்

கூட்டுறவுச் சங்கங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும். 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்திற்கேற்ப இவை பதிவு செய்யப்பட வேண்டும். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் பதிவு மேற்கொள்ளப்படும்.ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.

* பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.
* மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் உப விதிகளின் இருபிரதிகள்.
* கூட்டுறவுச் சங்கத்தைத் தாபிப்பதற்குரிய பொருளாதார இயலுமை பற்றிய அறிக்கை.
* கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வதற்காக பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிக்கையும், சமூகமளித்தோரின் உறுதிப்படுத்தப்பட்ட பெயர்ப் பட்டியலும்.
* கூட்டுறவுச்சங்கத்தின் நிதி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை
* மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் அமைவிடம் பற்றிய விளக்க வரைபடம்


### வணிக அமைப்புக்களின் ஆவண நடவடிக்கைகள்

ஒவ்வொரு வகை வணிக அமைப்புக்களையும் பதிவு செய்வதற்குத் தேவைப்படும் ஆவணங்களைப் போலவே அவ் வணிகங்களை நடத்திச் செல்லும்பொழுதும் பல்வேறு ஆவணங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும். வணிகம் சம்பந்தமாக இவ்வாறான பல்வேறு ஆவணங்கள் பயன்படுத்தப்படுமெனினும் அவற்றுள் சில ஆவணங்கள் பற்றி சுருக்கமாக இங்கு தரப்படுகின்றன.

### தனியுரிமை வணிகங்களுக்குரிய ஆவணங்கள்

* பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் போது அதற்கான விண்ணப்பப் படிவம்.
* பதிவு செய்தபின் கிடைக்கப் பெறும் பதிவுச் சான்றிதழ், வணிக நிறுவனத்தில் இச் சான்றிதழின் பிரதி ஒன்றைப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டும்.

## வணிகப் பதிவுச் சான்றிதழின் மாதிரியொன்று கீழே தரப்பட்டுள்ளது



Southern Provincial Council

Provincial Companies (SP) R 3

Business Names Ordinance (Cap. 149) incorporated by Business Names Statute No. 1 of 1991

තනි පුද්ගල ව්‍යාපාරයක් ලියාපදිංචි කිරීමේ සහතිකය

தனிநபரின் வியாபாரப் பதிவுச் சான்றுப் பத்திரம்

**CERTIFICATE OF REGISTRATION OF AN INDIVIDUAL BUSINESS**

Certificate No. S

I do hereby certify that the following statement, made in pursuance of the Business Names Ordinance (Cap. 149) incorporated by Business Name Statute No. 1 of 1991 was registered in the Provincial Register of Business Names for Southern Province Under 3............ on the ............ day of ............ 200....

| | |
|---|---|
| 1 The Business Name | |
| 2 The General Nature of the Business | |
| 3 The Principal Place of the Business | |
| 4 The Date of Commencement of the Business | |
| 5 Any other Business Name or names under which the Business is carried on | |
| 6 Full Name of Owner | |
| 7 If the Owner if known by the any other Name such Name | |
| 8 The Nationality of the Owner | |
| 9 The Usual Residence of the Owner | |
| 10 Name of the Divisional Secretary's Division | |
| 11 The other Business Occupation if any of the Owner | |

Office of the Provincial Registrar of Business Names SP Province

Dated at this ............................................ Day of ......... 200.......

Provincial Register of Business Name - S/Province

## பங்குடைமை வணிகங்களுக்குரிய ஆவணங்கள்

*    **பங்குடைமை ஒப்பந்தம்.**

பங்குடைமை வணிகமொன்றின் அக, புற முகாமை விடயங்களும்,வணிகச் செயற்பாடுகளுக்கானவிதிகளும், நிபந்தனைகளும் இவ் ஒப்பந்தத்தில் இடம் பெறும். பங்குடைமை ஒப்பந்தமொன்றில் இடம் பெறும் முக்கிய அம்சங்கள் பின்வருவனவாகும்:-

-- மூலதனம் இடப்படும் முறை
-- இலாப நட்டத்தைப் பங்கிடும் முறை
-- பங்காளர்கள் முகாமைத்துவத்தில் பங்களிப்புச் செய்யும் முறை
-- பங்காளரின் உழைப்புக்காக சம்பளம் வழங்கும் முறை
-- பங்காளரிடையே கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் முறை

1840 ஆம் ஆண்டின் மோசடி தவிர்ப்புச் சட்டத்தின் கீழ் ரூபா 1000 க்கு மேற்ப்பட்ட மூலதனத்தை ஈடுபடுத்தி ஆரம்பிக்கப்படும் பங்குடைமைகள் எழுத்திலான பங்குடைமைஒப்பந்தங்களை வைத்திருத்தல் வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்குரிய ஆவணங்கள்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கொழும்பு-கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும். பதிவு செய்வதற்காகப் பின்வரும் ஆவணங்களைக் கம்பனிப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

* பதிவுக்கான விண்ணப்பப் படிவம்

* அமைப்பு அக விதிப் பத்திரம்

* கம்பனியின் பெயர் தொடர்பான சான்றிதழ்

* கம்பனி இயக்குனரின் சம்மதமும் சான்றிதழும்

* கம்பனிச் செயலாளரின் சம்மதமும் சான்றிதழும்

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஆவணங்கள்

வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கான ஆவணங்களைத் தயாரித்து, பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைப்பதன் மூலம், அவை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர் கூட்டுறவுச் சங்கங்கத்தைப் பதிவு செய்து, பதிவிற்கான சான்றிதழை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பி வைப்பார்.

கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதைப் பற்றி இப் பாடத்தின் முற்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. எனினும் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய உபவிதிகள் (அமைப்பு விதிகள்) எனும் ஆவணம் பற்றி இங்கு சிறிது விபரமாகப்பார்த்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கமொன்றின் உப விதிகள் அல்லது அமைப்பு விதிகள் என்பது அக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிக் கூறுவதாகும். கூட்டுறவுச் சங்கங்கத்தை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ,அதனை உருவாக்குவோரால் ஏகமனதாக தீர்மானிக்கப்படும் விதிகளும்,ஒழுங்கு முறைகளும் இவ் அமைப்பு விதிகளில் இடம்பெறும்.

பல்வேறு வகையான வணிக நடவடிக்கைகள் பல்வேறு முறைகளில் ஒழுங்கமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றை ஆரம்பிக்கும் போதும் கொண்டுநடாத்தும் போதும் பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் உள்ளன. தனது வணிகக் கருத்திற்குப் பொருத்தமான வணிக ஒழுங்கமைப்பொன்றைத் தெரிவு செய்வதன் மூலம் வணிக செயற்பாடுகளை வெற்றிகரமாகவும், நீடித்த தன்மையுடையவையாகவும் கொண்டு நடாத்தலாம்.



இலவச விநியோகத்திற்காக



## செயற்பாடுகள்

(1) சரவணனின் வணிகத்திற்கு மூலதனத்தினாலும், உழைப்பினாலும் உதவிபுரிவதற்கு அவரின் நண்பனான சப்ராஸ் இணங்கியுள்ளார். இதன்படி நண்பர்கள் இருவரும் வணிகத்தைக் கொண்டு நடாத்துவதற்கும், எதிர்காலத்தில் வணிகம் சம்பந்தமாக நண்பர்களிடையே முரண்பாடுகள் ஏற்படாமலிருப்பதற்கும் எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என அவர்கள் இருவரும் உங்களிடம் ஆலோசனை வேண்டுகின்றனர்.

1 நீங்கள் அவர்கள் இருவருக்கும் கூறும் விளக்கம் யாது?

2. சரவணன், சப்ராஸ் ஆகிய இருவரும் பின்பற்றக்கூடிய நடவடிக்கைகளையும், அவை தொடர்பான ஆவணங்கள் இருப்பின் அவைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

(2) சசிகலா எனும் வணிகருக்கு ஏற்பட்ட மூலதனப் பற்றாக்குறை காரணமாக உதவிபுரிவதற்கு சப்ரினா, ஸன்பரா என்னும் அவரது நண்பிகள் இருவர் முன் வந்தனர்.அவர்களிடையே பங்குடைமை ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதெனில் பின்வரும் மாதிரிப் படிவத்திற்கேற்ப அதனைப் பூர்த்தி செய்க

### பங்குடைமை ஒப்பந்தம்

1 வணிகத்தின் பெயரும் முகவரியும்:-

2 வணிக வகை:-

3 பங்காளர்களின் பெயரும் முகவரியும்:-

4 பங்காளர் மூலதனமிடும் அளவு:-

5 இலாபநட்டத்தைப் பகிரும் விகிதம்:-

6 பங்காளர் ஒருவர் இறந்தால் அல்லது முறிவடைந்தால் பங்குடைமை செயற்படும் முறை:-

7 பங்குடைமையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளைத் தீர்க்கும் முறை :

8 பங்காளரின் கையொப்பமும் திகதியும்:-

9 சான்றுறுதிப்படுத்துபவரின் கையொப்பம், பெயர், தகைமை, முகவரி,

10 திகதி:-

(3) வகுப்பு மாணவர்களை 4 சிறு குழுக்களாகப் பிரித்து,பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களை நன்கு படிக்கச் செய்து, பின்வரும் இரு தலைப்புக்களிலும் விபரமாக விளக்குமாறு செய்க.

(i) பங்குடைமை வணிகத்தை ஆரம்பித்தலும், உரிய ஆவணங்களும்.

(ii) வரையறுக்கப்பட்ட கம்பனியை ஆரம்பித்தலும் உரிய ஆவணங்களும்.


(4) பின்வரும் வணிகங்களைப் பதிவு செய்யும் போது பயன்படுத்தப்படும் ஆவணங்களைச் சேகரியுங்கள்:-

(i) தனியுரிமை வணிகங்கள்

(ii) பங்குடமை வணிகங்கள்

(iii) வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

நீங்கள் சேகரித்த படிவங்களைப் பூர்த்தி செய்து, கோவையொன்றைத் தயாரிக்குக.



**சுருக்கம்**

முயற்சியாண்மையாளரொருவர் வணிகக் கருத்தொன்றை ஏற்படுத்திக் கொள்ளும் போது, பொருத்தமான வணிக அமைப்பினைத் தெரிவு செய்வதற்காக மிக முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டும். இலங்கை போன்ற நாடுகளில் தனியார் துறையும், அரச துறையும் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. தனியார் துறையில் முறைசார் ஒழுங்கமைப்புக்களும், முறை சாரா ஒழுங்கமைப்புக்களும் காணப்படுகின்றன. எனவே மிகப் பொருத்தமான வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்வதன் மூலம் வணிகச் செயற்பாடுகளை இடர்களின்றி கொண்டு நடாத்துவதற்கு இயலுமை ஏற்படும்.

வணிக வாய்ப்பினைப் பயன்படுத்தி, வணிக முயற்சியொன்றை ஆரம்பிக்க விரும்பும் முயற்சியாண்மையாளர் தமது இயலுமை, சந்தையின் தேவைப்பாடு, நாட்டில் அமுலிலுள்ள சட்டங்களும், விதிகளும் போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் இவ்வாறு வணிக அமைப்பினைத் தெரிவு செய்யும் போது, அது வணிக முயற்சியின் வெற்றிக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் காரணமாக அமையும்.



இலவச விநியோகத்திற்காக